## தொடர் பரிசோதனைக்கு மீண்டும் வரவேண்டுமா?

- 3 மாத காலத்துக்குப்பின் இரத்த பரிசோதனை (எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ்) செய்ய ஒரு சந்திப்புத் தேதி வழங்கப்படும்.
- நீங்கள் கிளமிடியா பாதிப்புடைய கர்ப்பிணியாக இருந்தால், சிகிச்சை முடிந்த 4 வாரங்களுக்குப் பிறகு மேலும் ஒரு பரிசோதனைக்கு மீண்டும் வர வேண்டும்.
- நீங்கள் பின்தொடர் சந்திப்புத் தேதியைத் தவற விட்டால், தொலைபேசி அல்லது கடிதம் மூலம் மருத்துவ மையம் உங்களைத் தொடர்புக் கொள்ளும்.

## முக்கியக் குறிப்புகள்

- பரிந்துரைக்கப்பட்ட அனைத்து மருந்துகளையும் முடிக்கவும்
- உங்கள் உடலுறவுத் துணையும் சிகிச்சை பெற உறுதி செய்யவும்
- நீங்கள் இருவரும் சிகிச்சை காலத்தின் போது உடலுறவுக் கொள்வதைத் தவிர்க்கவும்


பாதுகாப்பான உடலுறவு கொள்ளும் வழிமுறைகளைக் கடைபிடித்தல்

- உடல் திரவங்கள் பரிமாற்றம் இல்லாமல் உடலுறவுக் கொள்ளுதல் (பெண் அல்லது ஆண்குறி திரவங்கள்).
- உடலுறவுக் கொள்ளும் ஒவ்வொரு முறையும் தவறாமல் ஆணுறையைப் பயன்படுத்தவும்
- உடலுறவுக்கு முன்போ உடலுறவின் போதோ அளவுக்கதிகமாக மது அருந்தாதீர்கள். இது உங்கள் கணிப்புத் திறனை பாதிக்கும்.

## துறவுரை

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்து அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனை பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**
31 Kelantan Lane #01-16 S(200031)

### பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

C-T-1
Printed - August 2016

# கிளமிடியா (CHLAMYDIA)

NATIONAL SKIN CENTRE

DSC Clinic

## கிளமிடியா என்றால் என்ன?

சிங்கப்பூரில் பொதுவாக கண்டறியப்படும் பாக்டீரியா கிருமி வகை பால்வினை நோய்களில் (STIs) இதுவும் ஒன்று. கிளமிடியா ஆண் பெண் இருபாலரையும் பாதிக்கும்.

## கிளமிடியா எப்படி பரவும்?

உடலுறவின் போது (பிறப்பு உறுப்பு அல்லது ஆசனவாய் வழி உறவு) பெண் அல்லது ஆண்குறி திரவங்களின் மூலம் ஒரு நபரிடம் இருந்து மற்றொரு நபருக்கு பரவுகிறது. சில நேரங்களில் வாய்வழி உறவின் மூலமாகவும் பரவலாம்.

## இதன் அறிகுறிகள் என்ன?

கிளமிடியாவினால் பெரும்பாலும், குறிப்பாக பெண்களுக்கு, அறிகுறிகள் தோன்றாது. அறிகுறிகள் தோன்றினாலும் அவை கடுமையற்றவையாக இருக்கலாம்.

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| • சிறுநீர் கழிக்கும் போது ஆண்குறியில் எரிச்சல்<br>• ஆண்குறியிலிருந்து திரவம் கசிதல்<br>• அடிக்கடி சிறுநீர் கழித்தல் | • இயல்புக்கு மாறான பெண்குறிக் கசிவு<br>• இயல்புக்கு மாறான இரத்தப்போக்கு<br>• அடிவயிற்றுப் பகுதியில் வலி<br>• சிறுநீர் கழிக்கும் போது வலி |

## எப்பொழுது அறிகுறிகள் தோன்றும்?

பாதிக்கப்பட்ட பெரும்பான்மையினருக்கு அறிகுறிகள் ஏதும் தோன்றாத காரணத்தினால் கிளமிடியா ஒரு "அமைதியான" நோய்த் தொற்று என்று அழைக்கப்படுகிறது. அறிகுறிகள் தோன்றினாலும், அவை தொற்று ஏற்பட்டு பல வாரங்களுக்கு பின்னரே வெளிப்படும்.

## யவர் சோதனைச் செய்துக் கொள்ள வேண்டும்.?

- உடலுறவில் அடிக்கடி ஈடுபடுவோர் குறிப்பாக இளம் வயதுடையவர்கள்
- முறைமைப்படாத நபர்களுடனோ அல்லது பாலியல் தொழிலாளர்களுடனோ நீங்கள் பாதுகாப்பற்ற உடலுறவு கொண்டிருந்தால்

## கிளமிடியா எவ்வாறு கண்டறியப்படுகிறது?

- கிளமிடியா சோதனைக்காக குறிப்பாக எடுக்கப்பட்ட சிறுநீர் மாதிரியின் மூலம் (குறிப்பு: மருத்துவ மையங்களில் பொதுவாக எடுக்கப்படும் சிறுநீர் மாதிரிகள் இச்சோதனையை உள்ளடக்காது )
- ஸ்வாப் மாதிரியின் மூலம் - மருத்துவ தாதியாளர் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து ஒரு பருத்தி துடைப்புத்துண்டு குச்சியால் மாதிரியை சேகரிக்கப்பார்

(DSC மருத்துவ மையத்தில் கிளமிடியா பி.சி.ஆர் சோதனையை பயன்படுத்துகிறது)

## கிளமிடியா நோய்க்கு சிகிச்சை அளிக்க முடியுமா?

ஆம், நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைக் (ஆன்டிபயாடிக்ஸ்) கொண்டு.

உடலுறவுக் கொள்ளும் இரு நபர்களிடையே கிளமிடியா எளிதாக பரவுவதால், அறிகுறிகள் ஏதும் இல்லை என்றால் கூட நீங்களும் உங்களுடைய துணையும் ஒரே சமயத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

நீங்களும் உங்களுடைய துணையும் சிகிச்சையை முடித்து குணமாகும் வரை உடலுறவுக் கொள்ளாமல் இருக்க பரிந்துரைக்கிறோம்.

## கிளமிடியா மற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துமா?

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| • Epididymitis (வலியுடன் கூடிய விரை வீக்கம்)<br>• மலக்குடல் நோய்த் தாக்கம் | • இடுப்பு அழற்சி நோய் (PID) - கருப்பை மற்றும் கருக்குழாய்களில் ஏற்படும் தொற்றினால், வயிற்று வலி, கருக்குழாய் சேதம், மலட்டுத்தன்மை மற்றும் அசாதாரண கர்ப்பம் ஏற்படும் |

கிளமிடியா (அல்லது மற்ற பால்வினை நோய்கள் STIs) தொற்று இருப்பது உங்களுக்கு எச்.ஐ.வி நோய்க் கிருமியின் தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்பை அதிகரிக்க கூடும்.

அறிகுறிகளைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பது மிக அவசியம். அறிகுறிகள் கடுமையற்றவையாக இருந்தாலும் கூட உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.

## கர்ப்பகாலத்தில் கிளமிடியா

இதனால் குறைபிரசவம்மற்றும் குழந்தை இறந்தேபிறக்கும் ஆபத்து அதிகரிக்கும்.

கிளமிடியா பாதிப்புடைய பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பிறப்பு கால்வாய் வழியாக செல்லும் போது அவற்றின் கண்கள் மற்றும் நுரையீரலில் நோய்த் தொற்று ஏற்படக் கூடும்.

கிளமிடியா பாதிப்புடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்ப பாதுகாப்பான மருந்துகள் (ஆண்டிபயாடிக்ஸ்) வழங்கப்படும்.

நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது கர்ப்பிணியாக இருக்கலாம் என்று கருதினால், உங்கள் மருத்துவரிடம் தெரியப்படுத்துங்கள். இதன் மூலம் உங்களுக்கு சரியான ஆண்டிபயாடிக்ஸ் வழங்க முடியும்.